**இலங்கை ரேபிள் ரெனிஸ் சங்கம் - 2022**

----------------------------------------------------------------

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இலங்கை ரேபிள் ரெனிஸ் சங்கத்தின் (''சங்கம்'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் வருமான செலவுக் கூற்று, மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுக்கள் (திருத்திய) சட்டத்தின் 21(அ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை. எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சங்கம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். இருப்பினும், எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக, இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத ஆவணச் சான்றுகள்

| | விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | வங்கிக் கணக்கு மீதி | 483,865 | வங்கி கூற்றுக்கள் மற்றும் வங்கி இணக்கக் கூற்றுக்கள் | அனைத்து சான்றுகளும் சமர்ப்பிக்கப்படும். | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவைப்படுகின்ற போதியளவு ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பெற வேண்டியவை மற்றும் காசு முற்பணங்கள் | 396,821 | மீதி உறுதிப்படுத்தல்கள் | | |
| (இ) | செலுத்த வேண்டியவை | 1,146,680 | | | |
| (ஈ) | வருமானம் | 3,927,010 | பற்றுச்சீட்டுக்கள் | | |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெற வேண்டிய தொகை ரூபா 384,821 மற்றும் செலுத்த வேண்டிய தொகை ரூபா 452,820 ஆகியவை 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்டதாக தீர்க்கப்படாமல் நிலுவையாக காணப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | இது 2023 ஆம் ஆண்டில் திருத்தப்படும். | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவற்றை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 ஒக்டோபர் 27 ஆம் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்கங்களின் | குழுவினால் சான்றளிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து இரண்டு மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும் | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தாமதமின்றி சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. | விளையாட்டு பிரமாணத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரமாணங்களின் (III) ஆம் பகுதியின் 7(xiii) ஆம் பிரிவு | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சங்கம் 08 மாத தாமதத்திற்குப் பிறகு 2023 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பித்திருந்தது. | | |
| (ஆ) | 2021 திசெம்பர் 17 ஆம் திகதிய DSD/NSA/COM-01/202 ஆம் இலக்க விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் வழிகாட்டுதலின் 3 (III) ஆம் பந்தி | விளையாட்டு சங்கத்திற்கு இரண்டு வங்கி கணக்குகள் மட்டுமே பராமரிக்க முடியும். இரண்டிற்கு மேற்பட்ட வங்கிக் கணக்குகளை பராமரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், பிரமாணத்தின் பிரகாரம் விளையாட்டுத்துறை பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். எவ்வாறாயினும், சங்கம் 05 வங்கிக் கணக்குகளைப் பராமரித்து வந்ததுடன் அந்த வங்கிக் கணக்குகளில், 2022 ஆம் ஆண்டில் 02 வங்கிக் கணக்குகளில் எந்தக் கொடுக்கல் வாங்கலும் செய்யப்படவில்லை. | திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பிரமாணங்களின் பிரகாரம் வங்கிக் கணக்குகள் பராமரிக்கப்பட வேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 268,995 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 7,442 ஆக இருந்தது. எனவே, நிதி விளைவுகளில் ரூபா 276,437 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது நேரடிச் செலவுகள் கணிசமாகக் குறைவடைந்தமையே இம்முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் ரூபா 889,000 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்கு நிலையான சொத்துப் பதிவேடு பராமரிக்கப்படவில்லை மற்றும் வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டில் இது திருத்தப்படும். | தேவையான பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளப் பெறக்கூடிய வைப்புத்தொகை உட்பட ரூபா 160,000 ஆன 17 வைப்புத் தொகைகள் 05 ஆண்டுகளுக்கும் மேலாக காணப்பட்டதடன் அந்த வைப்புத் தொகைகள் தீர்க்கப்படாமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டில் இது திருத்தப்படும். | தொகை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் |